DINAMALAR

17 OCT 2022

PAGE 1

# பல்கலை.,யில் சேர்க்கை விண்ணப்பிக்க கெடு நீட்டிப்பு

புதுச்சேரி,அக்.17–

'கியூட்' தேர்வு எழுதி தேர்ச்சி பெற்ற பட்டதாரிகள், புதுச்சேரி பல்கலைக்கழக முதுநிலை மற்றும் டிப்ளமோ படிப்புகளில் சேர, வரும் 31ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என அவகாசம் அளிக்கப் பட்டுள்ளது.

மத்திய பல்கலைக் கழகங்களில் சேருவதற்கான 'கியூட்' நுழைவுத் தேர்வு ஜூலை 15ம் தேதி முதல் ஆக. 30ம் தேதி வரை நடந்தது.

தேர்வு முடிவு சமீபத்தில் வெளியானது. இதனை தொடர்ந்து மாணவர் சேர்க்கை நடைமுறையை புதுச்சேரி பல்கலைக் கழகம் துவங்கியுள்ளது.

இந்நிலையில் கியூட் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்ற பட்டதாரிகள் முதுநிலை மற்றும் டிப்ளமோ படிப்புகளுக்கு விண்ணப்பிக்க கால அவகாசத்தை வரும் 31ம் தேதி வரை பல்கலைக் கழகம் நீட்டித்துள்ளது.

இது குறித்து புதுச்சேரி பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அதிகாரி மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் உள்ள பல்வேறு முதுநிலை மற்றும் முதுநிலை டிப்ளமோ படிப்புகளுக்கு ஆன்–லைன் மூலம் விண்ணப்பிக்க அவகாசம் நீட்டிக்கப் பட்டுள்ளது. விருப்பம் உள்ள, கியூட் தேர்வு எழுதிய பட்டதாரிகள் வரும் 31ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்.

கியூட் பி.ஜி.கியூ.பி.,–38 கோடு தேர்வு எழுதிய மாணவர்கள் எம்.பி.ஏ., பேங்கிங் டெக்னாலஜி படிப்பிற்கு விண்ணப்பிக்கலாம்.

பி.ஜி.கியூ.பி.,–40 கியூட் தேர்வு எழுதிய மாணவர்கள் எம்.ஏ., மானிடவியல், ஹிந்தி, தமிழ், சமஸ்கிருதம், தத்துவியல், நூலக அறிவியல், டிராமா, தியேட்டர் ஆர்ட்ஸ் உள்ளிட்ட முதுநிலை படிப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பத்தை www.pondiuni.edu.in/admissions-2022–23 என்ற இணையதளத்தில் சமர்ப்பிக்கலாம்.

ஒவ்வொரு படிப்பிற்கான தகுதிகள் பல்கலைக் கழக தகவல் குறிப்பேட்டில் இடம் பெற்றுள்ளது.

இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது.

DINAKARAN

17 OCT 2022

PAGE 13

புதுவை பல்கலைக்கழகத்தில்

# முதுகலை படிப்புகளுக்கு விண்ணப்பிக்கும் தேதி நீட்டிப்பு

**புதுச்சேரி, அக். 17:** புதுவை பல்கலைக்கழகத்தின் உதவி பதிவாளர் (மக்கள் தொடர்பு பிரிவு) மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

2022-23ம் கல்வி ஆண்டில் புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் பல்வேறு முதுகலை பட்டம் மற்றும் பிஜி டிப்ளமோ படிப்புகளில் கியூட் (பிஜி) தேர்வு அடிப்படையில் சேர்வதற்கு ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதி அக்.31 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

சமீபத்திய தகவல்களுக்கு மாணவர்கள் பல்கலைக்கழக இணையதளத்தை தவறாமல் பார்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.